

# அமரர். கந்தையா நாகேந்திரபிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# அறிவொளித் தீபம்

21.11.2014



வேலணை மேற்கைச் சேர்ந்தவரும்,

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும்

கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர். கந்தையா நாகேந்திரபிள்ளை


அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

# அறிவொளித் தீபம்

21.11.2014

# சமர்ப்பணம்

ஆதார சுருதியாய்
அறிவொளியில் பரிதியாய்
சேதாரமற்ற செம்
பொன்னாய்! – மேதாவித்
தனமே உருவானான்
தாளுக்கே சமர்ப்பித்து
இனமே ஈந்திட்ட இந்நூல்!



அமரர்


# திரு. கந்தையா நாகேந்திரபிள்ளை

தோற்றம் : 28.02.1950 மறைவு : 22.10.2014

## திதி வெண்பா

கார் பெருகு ஜய வருட ஐப்பசித் திங்கள்
சீர் பெருகும் மறைபக்கச் சதுர்த்தசியில் - சார்பிலுயர்
வேலணை வேர் கொட்டடியூர் நாகேந்திரபிள்ளை அன்னார்
வேழமுகன் தாளடைந்த நாள்.

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

மாதர் பிறை கண்ணியானை
மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர் சுமந்து ஏத்தி,
புகுவார் அவர் பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்,
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப் பிடியோடு,
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்

## திருவாசகம்


பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரோடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுஞ் கழற உழறி
உமைமண வாளனுக்காய்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



## பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

தனதான தந்தனத் தனதான

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ

இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா

ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



## அமரர் கந்தையா நாகேந்திரபிள்ளை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ் நகருக்கு மேற்குத் திசையில் வளம்மிக்க வேலணைத் தீவு உள்ளது. இத்தீவில் சைவமும் தமிழும் பல நூற்றாண்டு காலமாக தழைத்தோங்கி நிற்கும் பண்பாட்டுச் சிறப்பு மிக்க வேலணை மேற்கு கிராமத்தில், உயர் சைவ வேளாள மரபில் வந்தவர்கள் திரு கந்தையா சௌந்தரநாயகி தம்பதியினர்.

திரு.கந்தையா அவர்கள் யாழ் நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தமையால், தமது தொழில் நடவடிக்கைகளுக்கு வசதியாக யாழ் நகரிலேயே ஒரு வசிப்பிடத்தை வாடகைக்குப் பெற்று தமது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தனர்.

கந்தையா சௌந்தரநாயகி தம்பதியினருக்கு 1948ம் ஆண்டில் ஒரு ஆண்குழந்தை கிடைக்கப்பெற்ற போதும் அக்குழந்தை சில நாட்களிலேயே உயிரிழந்துவிட்டதால் பெற்றோர் மிகுந்த சோகமும் சோர்வும் அடைந்திருந்தனர். குழந்தைச் செல்வம் வேண்டி அவர்கள் செய்த பிரார்த்தனை களின் பயனாக அவர்களுக்கு 28.02.1950 இல் ஆண் குழந்தையொன்று பிறந்தது. அழகான ஆரோக்கியமான குழந்தை கிடைக்கப் பெற்றமையால் பெற்றோர் மிக மகிழ்ச்சியடைந்தனர். தமது செல்வப் புதல்வனுக்கு நாகேந்திரபிள்ளை என நாமம் சூட்டி வளர்த்து வரலாயினர். குழந்தையை எல்லோரும் நாகேந்திரன் என செல்லமாக அழைத்தனர். இரண்டு ஆண்டுகளின் பின்னர் இன்னுமொரு ஆண் குழந்தையையும் பெற்று சண்முகபவானந்தன் என பெயரிட்டனர். பெற்றோர் குழந்தைகளை எவ்வித குறையுமின்றி செல்லமாக வளர்த்து வந்தனர். நாகேந்திரன் சிறுவயதில் மிகத் துடுக்கான சிறுவன். அவனது துடுக்குத்தனமும் வசீகரச் சிரிப்பும் எல்லோரையும் கவர்ந்தது.

குழந்தையின் அதிஷ்டமும், தந்தையின் தொழில் திறமையும் கடின உழைப்பும் காரணமாக தொழில் விருத்தியேற்பட்டு குடும்ப பொருளாதார நிலை வளர்ச்சிய டைந்ததால் அவர்கள் யாழ் கொட்டடியில் ஒரு காணியைச் சொந்தமாக கொள்வனவு செய்து அந்தக் காணியில் இருந்த பழைய வீட்டில் வசித்து வந்தார்கள். வியாபாரம் திருப்திகரமாக நடைபெற்று வந்தமையால் தம்பதியினர் தாம் வாங்கிய காணியில் புது மனையமைக்க திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளையில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த அக்குடும்பத்திற்கு பேரிடி ஒன்று ஏற்பட்டது. நாகேந்திரனின் தந்தையார் (1964ம் ஆண்டு) எதிர்பாராத வகையில் ஏற்பட்ட திடீர் இதய செயலிழப்பால் காலமானார்.

அப்போது நாகேந்திரன் 14 வயதுச் சிறுவன். கஷ்டமே அறிந்திராத சிறுவர்கள் திகைத்து நின்றனர். குடும்பத் தலைவனை இழந்து இரண்டு சிறு பிள்ளைகளுடன் இவருடைய தாயார் செய்வதறியாது சில காலம் தளர்ந்து போயிருந்தார். பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு குடும்பப்பாரம் முழுவதையும் தானே சுமக்கச் சித்தமானார்.

கணவர் நடத்திய வியாபார நிலையத்தை வாடகைக்கு விட்டு அதன் மூலம் கிடைத்த சிறு தொகையுடன் ஒரு வேலையாளின் உதவியுடன் கறவைப் பசுக்கள் வளர்த்து அந்த வருமானத்தில் பிள்ளைகளை எவ்வித குறையுமின்றி வளர்த்து படிக்க வைத்தார்.

அத்துடன் மறைந்த தனது கணவரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற விருப்பத்தாலும் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் கணவரின் மரணத்தின் ஓராண்டு நிறைவடையும் முன்னரே புது மனையைக் கட்டி முடித்தார்.

## இளமைக்காலம்

தந்தையின் இழப்பின் பின்னர் சிறுவனான நாகேந்திரனிடம் இயல்பாகவே ஒரு ஆளுமை விருத்தி யேற்பட்டது. தனது தந்தை வழி, தாய் வழி உறவினர்கள் யார் யார் என்பதை தம் தாயிடம் கேட்டறிந்து அவர்களுடைய சுக துக்கங்களில் தாமும் சென்று கலந்து கொண்டு உறவுகளை வலுப்படுத்தியதோடு அவர்களின் அன்பையும் நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொண்டார்.

இளமையில் கல்வியில் அதிகம் நாட்டம் கொள்ளாது துடுக்குத் தனமாக திரிந்த சிறுவனிடம் தான் படிக்க வேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. இவருடைய அயலில் உள்ள குடும்பத்துப் பிள்ளைகள் கல்வியில் திறமை மிக்கவர்களாக இருந்தமையால் தாமும் அவ்வாறு வரவேண்டும் என்ற அவா உண்டானதால் அவரிடம் மறைந்திருந்த திறமைகள் வெளிப்படலாயின. விடுமுறை நாட்களில் தனது பெரிய தந்தையார் வீட்டிற்குச் சென்று பெரிய தந்தையாரின் மகளிடம் (கமலா அக்கா) கேட்டுப் படித்து சாதாரண தரத்தில் சித்தியடைந்தார்.

## வாலிபப் பருவம்

நாகேந்திரன் உயர்தரத்தில் கற்கும் காலத்தில் இவருடைய உறவினரும் அந்நாளில் யாழ் மாவட்டத்திலே மிகப் பிரபலம் பெற்றிருந்த கணித ஆசிரியருமான திரு.பொன்.ஈசன் யாழ் நகரில் பிரத்தியேக வகுப்புகள் நடாத்திக் கொண்டிருந்தார். அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி அவரிடம் உயர்தரத்திற்கான கணித பாடங்களைக் கற்றுக் கொண்டார்.

உயர் தரத்தை நிறைவு செய்த பின்னர் தொழில் தேடிக் கொண்டிருந்த வேளையில் இலங்கை நீர்பாசன திணைக்களத்தில் மண்வள ஆய்வாளர் பதவி கிடைத்து அதில் இணைந்து சேவையாற்றி வந்தார். சேவையாற்றுங் காலத்தில் புலமைப்பரிசில் பெற்று நெதர்லாந்து நாட்டில் விஷேட பயிற்சியும் பெற்றுக் கொண்டார்.

**இல்வாழ்க்கை**

இவர் திருமண வயதை அடைந்ததால் இவருடைய தாயார் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணியதன் விளைவாக யாழ் சுருவிலைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் பூபாலசிங்கம் லீலாவதி தம்பதியினரின் மூத்த புதல்வி சூரியகுமாரிக்கும் இவருக்கும் திருமணம் நிறைவேறியது.

இவர்களுடைய இல்வாழ்க்கையின் பயனாக உதயசங்கர், சாலினி, அமிலா, வாமினி ஆகிய நான்கு மக்கட் செல்வங்களைப் பெற்றெடுத்தனர். இரண்டாவது குழந்தை சாலினி, பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும் அழகான அந்தப் பால்மணம் மாறாத பாலகி ஒரு வயது குழந்தையாக இருக்கும்போது வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட சிறுவிபத்தால் உயிர் நீத்தார். இச் சம்பவம் பெற்றோரைச் சிலகாலம் வெகுவாகப் பாதித்திருந்தது.

நாகேந்திரன் தனது பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக வளர்த்ததோடு இளமைக்காலத்தில் இருந்தே அவர்களுடைய கல்வியில் அதிக அக்கறை காட்டி தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார். பிள்ளைகளும் திறமையாகக் கற்று உயர்நிலையடைந்தனர்.

**மக்கட்சிறப்பு**

மூத்தபிள்ளை உதயசங்கர் உயர்தரம் சித்தியெய்திய பின் இந்திய அரசின் புலமைப்பரிசில் பெற்று இந்திய பல்கலைக்கழகம் ஒன்றில் இலத்திரனியல் பொறியியல் துறையில் பட்டம் பெற்று பின்னர் பிரித்தானியாவில் அத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்று பிரித்தானியாவில் Network Engineer ஆக பணிபுரிகிறார். இவர் வேலணை ஊரைச் சேர்ந்தவரும், கனடாவில் வசிப்பவர்களுமான திரு. கல்யாணசுந்தரம் ஜெயந்தா தம்பதியினரின் ஏக புதல்வி சிந்துஜாவை திருமணம் செய்தார்.

மகள் அமிலா இலங்கையில் தகவல் தொழில் நுட்பப் பட்டம் பெற்று தற்போது ஐக்கிய அமெரிக்காவில் குறித்த

துறையில் முதுமாணிக் கற்கையை மேற்கொள்கிறார். கடைசி மகள் வாமினி கொழும்பு பல்கலைக் கழகத்தில் கணினி விஞ்ஞானப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

**சமூகச் சேவையும் அறிவுத் தேடலும்**

நாகேந்திரனிடம் காணப்பட்ட சிறப்பான இயல்பு அவருடைய அறிவுத் தேடல். பல்துறை சார்ந்த விடயங்களையும் அறிந்துகொள்வதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அரசியல், அறிவியல், கணிதம், மருத்துவம் ஆகிய துறைகளில் இவரது நாட்டம் அதிகம். இத்துறை சார்ந்த நூல்களை, சஞ்சிகைகளை எங்கு கண்டாலும் எவ்வளவு விலை கொடுத்தாலும் வாங்கி வந்து வீட்டில் சேகரிப்பார். எல்லாவற்றையும் வகைப்படுத்தி வீட்டில் ஒரு நூலகம் ஒன்றை அமைத்து வைத்துள்ளார். படிக்கும் மாணவர்களுக்கு ஏதாவது நூல் தேவைப்பட்டால் எங்கிருந்தாவது பெற்றுக் கொடுப்பார். தன்னிடம் உள்ள அரிய நூல்களை தாமாக வலிந்து மற்றவர்களுக்கு கொடுத்து படிக்கச் சொல்லுவார்.

பிறருக்கு உதவுவதில் பெருவிருப்பம் கொண்டவர். உறவினர், நண்பர்களின் குடும்பங்களில் நடைபெறும் வைபவங்களில் விருப்புடன் கலந்து தன்னாலான உதவிகளைச் செய்வார். மேலும் வெளிநாடு செல்பவர்களுக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொடுத்தல், பிரயாண ஒழுங்குகள் செய்தல், விமான நிலையத்திற்கு கூட்டிச் சென்று வழியனுப்பிவைத்தல் போன்ற உதவிகளை நாகேந்திரனிடம் பெற்றவர்களின் தொகை எண்ணிலடங்கா.

மேலும் உத்தியோகத்திலுள்ள நண்பர்கள், உறவினர்கள், அயலவர்களின் சம்பளம், இடமாற்றம், பதவியுயர்வு போன்றவற்றில் ஏற்படும் பிரச்சனைகளையும் குறித்த திணைக்களங்களில் சென்று கதைத்து நிறைவேற்றி வைத்த சம்பவங்களும் ஏராளம். இதனால் இவருடைய நண்பர்கள் வட்டம் மிகப் பரந்தது.

**இறுதிக்காலம்**

இவ்வாறு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தவருக்கு 2012ம் ஆண்டில் எதிர்பாராத விதமாக பக்கவாத நோய் ஏற்பட்டது. ஆரம்பத்தில் நோயின் தாக்கம் மோசமானதாக இருக்கவில்லை. வழமையாகவே உணவு முறையிலும் மருத்துவ சிகிச்சையிலும் அதீத கவனம் செலுத்தி கட்டுப்பாடாக இருந்தவருக்கு இந்நோய் ஏற்பட்டது யாவருக்கும் வியப்பாக உள்ளது.

இவருடைய துணைவி தன்னாலியன்றவரை எத்தகைய பொருட் செலவையும் பொருட்படுத்தாது நிபுணத்துவம் பெற்ற பிரபல வைத்தியவர்களிடம் சிகிச்சையளித்தும், தன் மெய்வருத்தம் பாராது மிகக் கரிசனையுடன் பராமரித்து வந்தும் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லை.

இறுதியாக இவருடைய நீண்டகால நண்பரான அற்புதசிகாமணியுடன் இந்தியாவிற்கு அனுப்பி விஷேட வைத்திய நிபுணரிடம் சிகிச்சையளித்தும், அவரை நோயின்பிடியிலிருந்து விடுவிக்க முடியாதது மட்டுமின்றி நோயின் தாக்கம் அதிகரித்து, இறுதி இரண்டு மாதங்களுக்கு மேலாக ஒரே அடியாக படுக்கையில் இட்டுவிட்டது.

அன்று தீபாவளித் திருநாள் 22.10.2014, யாரும் எதிர்பாராத வகையில் அதிகாலை மிக அமைதியாக துயின்று கொண்டிருந்தவர், அப்படியே மீளாத்துயில் ஆழ்ந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்.

## எனக்குள்ளே இணைந்துவிட்டாய் !

வண்ண வடிவுமில்லை ! வார் குழலில் பூவுமில்லை !
கண்ணில் ஒளியுமில்லை ! கண்ணீரும் வற்றவில்லை !
எண்ணரிய துயரத்தில் ஏங்கி அழுகின்றேன்!
விண்ணேறிச் சென்று விட்டாய்! வேதனையில் வாடுகிறேன்!

உனக்குள்ளே நான் அடங்கி உயிர்த்திருந்த காலம் போய்
எனக்குள்ளே நீ அடங்க உன் தாயாய் ஆனேனே!
தினம் உன்னைச் சேயாக சீராட்டிப் பார்த்தேனே!
மனம் ஏங்க நீ மறைந்து வான் ஏறிச் சென்றாயே!

மணவாளன் என வந்தாய்! மகனாக மாறி விட்டாய்!
துணையாவாய் என்றிருந்தேன்! உன் துணையாய்
ஆக்கி விட்டாய்!
இணை என்ற சொல் மாறி எனக்குள்ளே இணைந்து விட்டாய்!
அணையாத தீபமென அகத்துள்ளே வாழ்ந்திருப்பாய்!

மனைவி
சூரியகுமாரி

## தேற்றம்

மரணம்! ஒரு துணையில்லாத இரகசிய பயணம்
நடக்கும் போதே பாதைகள் தோன்றும்!
மரணம்! ஒரு அணையில்லாத ஆற்றின் ஜனனம்
தடுக்கும் போதே வேகத்தைத் தூண்டும்!
மரணம்! ஒரு நிலையில்லாத உயிரின் சயனம்
எழுப்பும் போதே கனவுகள் தோன்றும்!
மரணம்! அது முடிவில்லாத துயரின் சரணம்
முடிக்கும் போதே ஞானத்தை வேண்டும்!

# கோடிக்கும் ஈடாகுமா என் அப்பா !

ஆவியுருக அகமெல்லாம் சேர்ந் துருக
கூவியென் பெயரழைத்த குரல்வளைக்கு – தூவிமலர்
மாலை இட்டேனே! மலர் பரவி விட்டேனே!
சோலையிலே நானிட்டேன் தீ!

இரவு பகல் பாராது இமையுறக்கம் நேராது
கரையேற்றப் பாடு பட்ட திருவுடலை – சிதையேற்றி
தீயாலே சுட்டேனே! செய் கடனும் தீராமல்
வாயாலே பட்டேனே பாடு!

வேண்டும் நூல் தந்து வழிகாட்டும் பேர் தந்து
யாண்டும் எனக்காய் உழைத்து – தூண்டு
முகமாய் நின்றாய் ! முகம் காண முன்னே
சுகமாய் நீ சென்ற தேன்?

கல்விக்கு வழிகாட்டிக் கடல் கடந்து படிப்பிற்காய்
செல்வதற்கும் வழி செய்து சிறப்பித்து – நல்லதொரு
மனையாளும் தந்தாய்! மனையெல்லாம் வாட
எனை விட்டு ஏன் சென்றீர் அப்பா!

தக்கன நீ செய்தாய்! தனக்கென்று ஏதும்
வைக்காமல் ஊரையும் வளர்த்தாய்! – திக்கெல்லாம்
நாடி வந்தோர்க்கு நலம் செய்தாய் அப்பா!
கோடிக்கும் ஈடாகா நின் குணம்!

மகன்
உதய சங்கர்

# MY DEAREST UNCLE.......

Sitting majestically on the manavarai at our wedding, smiling and shaking hands with guests - this is how I will always remember my Mama, the Late Mr. K. Nagendirapillai.

Mama was many things to so many. A learned man, a righteous man, a dedicated father, a devoted husband. To me however, he was and always will be, my second father. A woman, they say, lives her life in but two homes. The first home being her mother's home where her every wish and desire is fulfilled, and no stone left unturned for her happiness. The second home being her husband's home. Here she will learn patience, responsibility and maturity. I have been fortunate enough to never feel a disconnect between both of my homes. My Mama and family have made me feel as if I have always been a part of the family, and for that I am eternally grateful.

One of my fondest memories of Mama occurred a few days after our wedding. Shankar and I had returned home and Mama said he had a few things to give me, He called me over and handed me three books. He had saved books on cooking, sewing and marriage advice for me. At first I laughed and joked with him that I would need more than books to run my family, and he laughed. He told me that they would come in handy as the responsibility of taking care of his son was now mine. Despite the pomp and circumstance of the wedding ceremony, it was at that vital moment that I realized my life had changed. I was officially apart of a new family, and that too with wide, open loving arms. This small gesture, unbeknownst to him, cemented my appreciation of this man.

Sadly it seems, God has willed another path for us both. He has returned to his Creator, and I am here left to the material devices of this world. I thank him for the memories we shared, and hope that when my time comes, we meet and share yet another smile.

Daughter in law, Mrs.Sinduja Uthayashankar
(Canada)

## முகம் காண ஏங்குகிறேன் அப்பா !

ஒரு துளியில் உருவாகி
உன் உருவ வடிவாகி
உனதருகில் விளையாடி
உன்னோடு உரையாடி

தெரு வெளியில் நடையாடித்
திசை அறியத் துணையாகி
வரும் வரைக்கும் மனம் வாடி
வந்த பின்னர் மனம் மாறி

இரு மகள்கள் என ஆகி
இறுதிவரை உன தாகி
பெருமை யுறு வழி கோலி
பிறர் புகழும் நிலை கூறி

அழும் நொடியில் நீ வாடி
அறி வொளியில் நீ ராடி
அடுக்கடுக்காய் நூல் தேடி
அப்பா ! என ஆனவரே

என் வாழ்வு நீர் செய்த
ஏற்பாடு என ஆக
உன் பாடு பல கோடி
உனக்கு என்ன செய்ய?

கடலோடு கரை தாண்டி
எனைச் செல்ல வைத்து
உடலோடு உயிர் தாண்டி
நீர் சென்ற தெங்கே?

முகத்தோடு முகம் வைத்து
முத்தங்கள் தந்தாய்!
முகம் பார்க்க முடியாமல்
வைத்தெங்கு சென்றாய் ?

மகள்
அமிலா

பலசாலிக்கு பாரம் என்று ஒன்று இல்லை.
முயற்சி உடையவர்களுக்கு தூரம் என ஒன்று இல்லை.
கல்வியாளர்களுக்கு அந்நிய நாடு என ஒன்று இல்லை.
அன்போடு பேசுபவர்களுக்கு
அந்நியன் என ஒருவரும் இல்லை.

## பிறரென்றும் தமரென்றும் பேதம் இலான் என் அப்பா!

நூலோடு நீ கொண்ட நேசங்கள் அப்பா !
விழியோடு இமை போன்றது!
யாரோடு நீ கொண்ட பாசங்கள் அப்பா!
விண்ணோடு நீ சென்றது?

ஊரோடு பலர் அந்த தேசங்கள் போக
உன் மண்ணை உறவாக்கினாய்!
உறவோடு உறவாடி உயிராக வாழ
உனை நீயே உரு வாக்கினாய்!

தீயோடு வருகின்ற தீபத்தைப் போல
பலர் வாழ்வில் ஒளியேற்றினாய்!
திரியோடு விழுகின்ற மெழுகாக மாறி
உனை நீயே கழுவேற்றினாய்!

பிறரென்றும் தமரென்றும் சிறு பேதம் கூட
உன் நெஞ்சம் காணாததே !
நீயாடி அயர்கின்ற நிலை வந்த பின்னே
துரும்பாக அவை ஆனதே !

யார் வந்து எது கேட்டு நின்றாலும் அவர்க்காய்
தாயாக நீ மாறினாய்!
நேர் வந்து யாரேனும் பார்க்காரா என்று
நோயோடு போராடினாய்!

இல்லாத உறவெல்லாம் ஒன்றாகச் சேர
எந் நாளும் நீ ஏங்கினாய்!
எல்லோரும் உனைக் காண வர வேண்டும் என்றா
விரைவாக உயிர் நீங்கினாய்?

இரவென்ன பகலென்ன நீ பட்ட பாடு
இள நெஞ்சம் அதைத் தாங்குமா?
இரு ஆண்டு காலங்கள் சிறு பிள்ளை போல
உனைப் பார்த்த சுகம் நீங்குமா?

உன் நோய் இந்த மண் மீது எவர்க்கும்
வரக் கூடா தென ஏங்கினாய்!
இந் நாளில் அதற்காக நூலொன்றைத் தந்து
இரக்கத்தில் வான் ஏகினாய்!

மகள்
வாமினி

| | |
|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | தாய், தந்தை |
| வந்தால் போகாதது | புகழ், பழி |
| போனால் வராதது | மானம், உயிர் |
| நம்முடன் வருவது | பாவம், புண்ணியம் |
| அழிவைத் தருவது | பொறாமை, கோபம் |
| வருவதும் போவதும் | இன்பம், துன்பம் |
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | பணிவு |
| மிகவும் பெரிய தேவை | நம்பிக்கை |
| மிகவும் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| செய்யக் கூடாதது | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக் கூடியது | உதவி |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | நட்பு |
| மறக்கக் கூடாதது | நன்றி |

## தந்தைக்கு நிகரான தமையனே !

வளம் எங்கள் ஊராக
வதி விடங்கள் வேறாக
இள வயதில் தந்தையினை இழந்தோம்! – அன்று
புலம் அங்கு மனம் இங்காய்ப் பெயர்ந்தோம்!

உளம் என்றும் ஒன்றாக
உடல் என்பது இரண்டாக
தளம் அன்பின் தளமாக வளர்ந்தேன்! – இன்று
குளம் என்று விழி மாற நனைந்தேன்!

விலையற்ற பெருஞ் சொத்து
நீ தானே! அண்ணா!
தலைப் பிள்ளை என வந்த
சீமானே! அண்ணா!

அறியாத புதிரில்லை!
தெரியாத இடமில்லை!
தெளிவான உன் பேச்சு அண்ணா! – இது
தெரியாத ஆளில்லை அண்ணா!

சில நாட்கள் முன்வந்து
சிறப்போடு உனைக் கண்டு
பல நாளின் சுமை தீர்த்தேன் அண்ணா! – ஜென்ம
பந்தத்தின் நிறைவே என் அண்ணா!

தம்பி
ஆனந்தன் குடும்பம்

## அன்பான மருமகனே! அறிவாலே உயர்ந்தவனே!

உன்னோடு நான் கொண்ட சிறு சண்டை பின்னர்
அன்பாக மாறும்! நாளாக ஆறும்!
தளராத துணிவும் தானென்ற நிமிர்வும்
இழையோட நிற்கும் உன் உருவம் எங்கே?
அழகாக நீ சொல்லும் கருத்துக்கள் எங்கே?
விலகாத உந்தன் விளக்கங்கள் எங்கே?
வாய்பேசு மகனே! என் மறு மகனே!
நீ பேச மாட்டாயோ! என ஏங்கும் இதயம்!
நீ இல்லா, மகள் வாழ்வில் இனி என்ன உதயம்?

மாமியார்
லீலாவதி

## விழிநீர் சொரிய ...

அலை பேசி மூலம் உங்கள்
திறமான குரல் கேட்டு
மனம் மகிழ்ந்தேன் அத்தான்!
உங்கள் முகம் பார்க்க
எண்ணித் தவித்திருந்தேன் அத்தான்!
நேரில் உங்களுடன் கதைத்து
அளவளாவ வேண்டுமென்ற
உள் மனதின் ஆசை கனவாகிப் போனதே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகிறேன்!

மைத்துனர்
அசோகன் குடும்பம்

## அத்தானே எம் ஆசானே....

அத்தான்! என் அக்காவின்
சொத்தாகி நின்றீர்!
அனுதினமும் வழிகாட்டி
வித்தாகிச் சென்றீர்!

எத்தனையோ! உதவிகளை
எமக்காகச் செய்தீர்!
என் மக்கள் கல்விக்கும்
வழி காட்டி நின்றீர்!

முத்தான கருத்துடனே
மேலான அறிவும்
மிடுக்கான தொனியுடனே
நேரான வழியும்

அத்தனையும் அமைந்திருந்த
அத்தானே! உங்கள்
அழகு முகம் இனிக் காண
அமைந்த வழி யாதோ?

போராலே ஊர் விட்டு
இடம் பெயர்ந்த போது
உம் உதவி அதைப் பெற்றே
ஒரு நிமிர்வு கொண்டோம்!

யாரோடு இனி நோவோம்?
என் சொல்லி அழுவோம்?
இறை வனவன் திருவடியே
எந் நாளும் தொழுவோம்!

மைத்துனி
சந்திரா குடும்பம்

## வழிகாட்டும் மச்சானே !

அக்காவின் திருமணத்தில்
உமது அருகில் தோழனாய்
உங்கள் சொற் கேட்கும்
அன்பு மச்சானாய்
உம்மோடு உறவானேன் நான்
இறுதியாக சங்கரின்
திருமண வைபவத்தில் கண்டேன்
அறிவுரைகள் கூறுவதில்
உங்களுக்கு எவர் நிகர்?
வழிகாட்டி ஆவதில்
உங்களைப் போல் யாருளர்?
எல்லாம் மனக் கண்ணில்
காட்சிகளாய் விரிகின்றன
உங்கள் அறிவுரைகளை
நெஞ்சில் சுமந்த படி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறேன்!

மைத்துனர்
யசோதரன் குடும்பம்

இறந்து போனவர்களை சைவர்கள் 'சிவபதவி' அடைந்தான் என்கிறார்கள். அந்தப் பதவி, இந்தப் பதவி என்று அலைகின்ற மனிதன் கடைசியாக அடைகின்ற பதவியே சிவபதவி. உச்சமான பதவி அது. உன்னதமான பதவி அது. எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவி அது. சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தப்ப முடியாத பதவி அது.

## நீங்கா நினைவலைகளுடன் ...

யாழ் மண்ணில் உங்களுடன்
நான் நடந்த ஞாபகங்கள்!
இன்றைக்கும் இனிக்கின்ற
இனிதான நினைவலைகள்!
என் வாழ்வின் அர்த்தத்தை
எனக்களித்த அத்தானே!
என் கல்யாண தீபத்தை
ஏற்றி வைத்த பெருந்தகையே!
பூரணத்தை நான் அடையக்
காரணமாய் ஆனவரே!
அத்தானே! உம் பிரிவால்
ஆழ் துயரில் ஆழ்கின்றோம்!

மைத்துனர் - சுகந்தன் குடும்பம்

## இனி இந்த நேர்கோடுகள் எங்கே சந்திப்பது ...

எதிரிடை பேச்சுக்கள் நடுவே
அன்பும் கலந்திருக்கும்!
இதுதான் சரி என நீரும் - இல்லை
அதுதான் சரி என நானும்
இருவரும் செய்த போர்கள வாதம்
இனிமேல் என்று கண்டிடக் கூடும்?
அத்தான்! என்று அழைத்திட்ட காலம்
இத்தரை மீது இனி என்று மீளும்?
தேகம் விட்டீர்! செய்தியைக் கேட்டேன்!
தேசம் விட்டு உம் நேசத்தால் வந்தேன்!
அத்தான்! உங்கள் திரு முகம் கண்டேன்!
அக்காள்! அருகில் ஆறுதல் சொன்னேன்!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவன் அருள்க!

மைத்துனர் - ரமணன் குடும்பம்

## ஆசை அத்தானே!

அறிவைப் பாராட்டும் உங்கள்
அற்புதக் குணம் என்னை
மெய் சிலிர்க்க வைத்தது!

எந்த ஒரு விடயத்தையும்
ஆழ்ந்து அறியும் உங்கள்
ஆர்வம்! என்னை
ஆனந்த மடைய வைத்தது!

என் மனைவியின் தகப்பனாரின்
தூல உடல் தூங்கும் இடம் கண்டு
எம்மை அங்கு கூட்டிச் சென்று
உங்கள் நேரகாலம் பாராது
எமக்காய் நீர் பட்ட பாடுகளை நினைக்கிறேன்!

உங்கள் மரணச் செய்தி
என்னை அதிர்ச்சி அடையச் செய்தது!
உடனே! உங்கள் முகம் காண
ஓடி வந்தேன்!
உயிரற்ற உடலம் கண்ட போது
ஒருகணம் என் உயிர் நின்றதை உணர்ந்தேன்!
அத்தானே ! உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்!

மைத்துனர்
குமணா குடும்பம்

கண்கள், தம்மைத் தாமே நம்புகின்றன. காதுகளோ
மற்றவரையே நம்புகின்றன.

## உடன் பிறவாச் சகோதரனுக்கோர் அஞ்சலி . . .

அன்னை தந்தை வேறானாலும் அன்பால் இணைந்த சகோதரன் இவன். சிறியதந்தை சிறியதாய் பெற்றெடுத்தாலும், பெரியதம்பி என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அன்பான சகோதரனே!... எம் அறுவருக்கும் இவன் ஓர் தம்பியாக, அண்ணனாக,நண்பனாக,தோழனாக, தேவைப்பட்ட போதெல்லாம் கைகொடுக்கும் கண்ணன் அல்லவா இவன். இவர் நோய்வாய்ப் பட்டதையே ஜீரணிக்க முடியாமல் திணறிய எமக்கெல்லாம் இவர் இழப்பு மனதை உருக்கி கண்களில் நீர் பெருக்கெடுத்தோட வைத்து விட்டதே. இவர் பெரியண்ணா என்றால் மதிப்பும், அக்கா என்றால் பாசமும், சின்னண்ணா என்றால் அன்பும், ராசாஅண்ணா என்றால் நட்பும், வவாஅண்ணா என்றால் தோழமையும், தேவா என்றால் அதில் பாசமும் கண்டிப்பும் தெரியுமே இதை எல்லாம் இனி எப்பிறப்பில் கேட்போம் நாம்.

சகோதரனே! இவன் ஓர் சாதனை வீரனல்லவா. இவன் உறவால் நாம் அடம்பன் கொடியென திரண்டிருந்தோமே, ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்ந்தவனே. பலருடனும் பழகுவதில் இவனுக்கு நிகர் இவனே தான். பல்துறை வித்தகன் இவன். சாஸ்திரம் முதல் வைத்தியம் வரை அறிவை வளர்த்தவனே! அவன் திறமை எண்ணிப் பெருமை கொண்டோமே நாம்.

மரணம் என்பது இயற்கையானது தான் ஆனாலும் இவ்வளவு விரைவிலா நிகழவேண்டும்?

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எம் சகோதரனே! நின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அமரர்கள் திரு. திருமதி ஐ. பொன்னையாவின்
பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள்

## உறவினரின் நினைவலையில் . . .

திருச்சிற்றம்பலம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவாறெங்கனே போமாறேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டா
சித்தையீர் உமக்கொன்று சொல்லக்கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ்சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே

திருச்சிற்றம்பலம்

(அப்பர் சுவாமிகள்)

அமரர் கந்தையா நாகேந்திரபிள்ளை அவர்கள் பெறாமகன் ஆவார். எங்கள் உறவினராய், உற்ற நண்பராய் அன்போடு பழகி எங்கள் வீட்டுக் கருமங்களுக்கெல்லாம் குடும்பமாக வந்து கலந்து மகிழ்ந்து எங்களையும் மகிழ்விப்பவர்.

அன்பாகக் கதைத்து, ஆதரவாய்ப் பழகி உள்ளங் கலந்து உறவாடுபவர். எதிர்பாராவகையில் நோயுற்று இவ்வுலகை விட்டுப் போய்விட்டார். "வந்தவாறெங்கனே போகுமாறேதோ" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்வது போல நாம் எங்கிருந்து வந்தோம், எங்கே போகப்போகிறோம் என்பது எங்களுக்குத் தெரியாது.

எங்கே போவோம், எப்ப போவோம், எப்படிப் போவோம் என்பது எங்களில் யாருக்கும் தெரியாது. எல்லாரும் போவோம் என்பது உண்மை. படைத்தவனே பின் எடுத்துக் கொள்கின்றான் என்பது மட்டும் உண்மை. இதையாரும் தடுக்க முடியாது தப்பவும் முடியாது.

பிறப்பதும் இறப்பதும் இப்பேருலகியற்கை. நாம் போகும் போது பற்றித் தொடர்வன நாம் செய்த புண்ணிய

பாவங்களே யாகும். ஆதலால் நாம் வாழும் போதே தானதருமங்களாகிய புண்ணியங்களைச் செய்யவேண்டும்.

எங்களை விட்டுப் போன அமரர் நாகேந்திரபிள்ளை அவர்கள் தான் செய்த தானதர்மங்களின் துணையாக இறைவன் திருவடிகளில் அமைதி பெற வேண்டுமெனத் தொழுகின்றோம். அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தின ருக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் பசி நோய் செய்தபறிதான்
தாழாது அறம் செய்யின் தடங் கண்ணான்
மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக் கேதார மென்னீரே.

திருச்சிற்றம்பலம்

(சுந்தரர் தேவராம்)

அங்கிள்
லயன், கலாநிதி கோ. பத்மநாதபிள்ளை J.P
88, வாசல வீதி, கொட்டாஞ்சேனை.

## ஏழு நற்குணங்கள்

ஏழ்மையில் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
வறுமையிலும் பரோபகாரம்
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எளிமை
பதவியிலும் பணிவு

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

திருவள்ளுவர்

## அமரர் கந்தையா நாகேந்திரம்பிள்ளை

இவ்வுலகில் பிறப்பவர் யாவரும் இறப்பது நிச்சயம் என்பது இயற்கையின் நியதி.

தனது 65வது வயதில் இவ்வுலகை விட்டு அகன்ற கந்தையா நாகேந்திரபிள்ளையின் கடந்த காலம் பற்றி நோக்கின் வேலணை மேற்கைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவர். இளமைக் காலத்தை யாழ்-கொட்டடியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார்.

எனக்கு 1971 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதிக்காலம் வரை செய்த உதவிகளை நினைவுபடுத்திக் கொள்கிறேன். 1971 இல் அவர் உயர்தர வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில், யாழ்ப்பாணத்தில் உயர்தர வகுப்பில் கணித பாடம் பிரத்தியேகமாக கற்பிப்பதற்கான இடவசதியை ஏற்படுத்தி அவ்விகுப்பில் என்னிடம் கணிதம் கற்றது மாத்திரமல்லாது, மாணவர்களின் ஒழுங்கு நடவடிக்கைகளையும் கண்காணித்து, உதவிபுரிந்தார்.

பின்பு 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் அசாதாரண சூழ் நிலையால் நான் கொழும்பு வந்த போது, எனது பாடசாலை இடமாற்றம் தொடர்பாக, வசதியான பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெறவும் பல உதவிகளைச் செய்தார். அது மாத்திரமல்ல பிரான்ஸ் பழைய மாணவ சங்கத்தினர் என்னை அங்கு அழைத்த போது பிரான்ஸ் தூதுவராலயத்தில் இருந்து விசா பெறுவதற்கு பல்வேறு உதவிகளை நல்கினார்.

எனக்கு, எனது குடும்பரீதியாக பல்வேறு உதவிகளைப் புரிந்தார் என்பது வெளிப்படை உண்மை.

அவரிடம் நான் கண்டவை: எந்த ஒரு திணைக் களத்திற்கும் சென்று, மேல் அதிகாரிகளுடன் சாதுரியமாகப் பேசி, காரியத்தை சாதகமாக்கிக் கொள்வார். இவரது நல்லெண்ணம், பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறாத பல மாணவர்களுக்கு, மேற்படிப்பைத் தொடர்வதற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி அவர்களின் முன்னேற்ற பாதையை வழிவகுத்துவிட்டார். அவ்வாறு பயன் பெற்றோர் பலர் என்பது கண்கூடு. இவ்வாறான பல்வேறு பேருதவிகளை எனக்கு மாத்திரமல்ல, தன்னை நாடி வந்தோருக்கெல்லாம் செய்த ஒருவரின் மறைவு பேரிழப்பாகும். கல்வியில் மிகவும் ஆர்வம் கொண்டவர் தனது பிள்ளைகள் மூவரையும் உயர் கல்வி பெற்று உயர்வு அடைய முன் நின்றார். விஞ்ஞான கணித பாடங்களுக்கான நூல்களைச் சேகரித்து தனது இல்லத்திலேயே நூல் நிலையம் ஒன்றை அமைத்திருந்தார்.

இத்தகைய ஒருவரின் மறைவு அவரது குடும்பத்தாருக்கு மாத்திரமல்ல அவரைச் சார்ந்த அனைவருக்குமே பேரிழப்பாகும்.

அவரது குடும்பத்தினர் அனைவரும் மன அமைதி பெறவும், அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தத்தை அடையவும் வேண்டி நிற்கிறேன்.

பொன். ஈசன்

ஓய்வுநிலை ஆசிரியர்

மனிதரில் ஒன்றுபட்டுச் சேர்ந்திருப்பீர் –
இங்கு மழலைகள் தமிழ் பேச செய்து வைப்பீர்
தமக்கென கொண்டு வந்ததேதுமில்லை –பெற்ற
தமிழையும் விட்டுவிட்டால் வாழ்க்கையில்லை !

## மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த பெருமகன்

புன்முறுவல் பூத்த வதனம், அனைவரையும் அரவணைக்கும் தன்மை, எவர்க்கும் விரைந்து சென்று உதவிக்கரம் நீட்டும் பண்பு, இத்தனையும் தன்னகத்தே கொண்டவர் தான் அமரர். நாகேந்திரபிள்ளை. கொட்டடி அம்மாவின் மகன் என்றால் பலருக்குத் தெரியும். ஒரு call கொடுத்தால் போதும் அந்த இடத்துக்கு விரைந்து சென்று தன்னால் ஆகக் கூடிய உதவிகளைச் செய்யத் தயங்கமாட்டார். அத்துடன் கல்வி விஷயமாகவோ, மருத்துவ ரீதியாகவோ, உணவு வகை விஷயத்திலோ என்ன தேவையோ அனைத்திற்கும் இவரைத் தொடர்பு கொண்டால் விடை கிடைத்துவிடும். அந்த அளவுக்கு புத்தகங்களைச் சேகரித்து வைத்துள்ளார்.

இவருக்குப் பிடித்த பொழுதுபோக்கு நூல்களை சேகரிப்பது தான். இவருக்கு வேறு எந்த ஆசையும் இருந்ததாகத் தெரியவில்லை. அது ஆசையல்ல தணியாத காதல் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு நூல்கள் மேல் ஈர்க்கப்பட்டு வீட்டில் ஒரு library யையே வைத்திருக்கிறார். எந்தத் துறையில் வேண்டுமானாலும் அவரிடம் அதற்குரிய புத்தகங்களைப் பெறலாம். யாருக்கு என்ன விடயம் தேவையோ அதைத்தானே தன்னிடம் உள்ள புத்தகசாலையில் தேடியெடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்து அதற்குரிய விளக்கமும் கொடுத்துத் தான் திரும்புவார்.

வீட்டில் நூல் நிலையம் அமைத்ததற்கமையத் தன் பிள்ளைச் செல்வங்களையும் கல்வியில் சிறந்தோங்க வைத்து உள்ளம் களி கூர்ந்தார். அத்துடன் மேல் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கும் (யார்க்கும்) exam நன்றாகச் செய்ய உதவியாக புத்தகங்களைக் கொடுத்து உதவுவார்.

இந்த வகையில் மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக ஆற்றியதோடு தன்னைச்

சார்ந்தவர்கட்கும் உறுதுணையாக இருந்து வந்தவருக்கு இறைவன் இப்படி ஒரு நோயைக் கொடுத்து அவசரப்பட்டுத் தன்னிடம் எடுத்துக்கொண்டான் என்பதை எண்ணும் போது ஆற்றொணாத் துயரம் தான். படைத்தவன் பறித்துக் கொண்டான் 'பிறப்பண்டேல் இறப்புமுண்டு' என்பது நியதி. எனவே அன்னாரின் ஆன்மா இறைவனின் திருவடிகளைச் சேர்ந்து முத்தியடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு. நீலகண்டன் – இந்திரா

## புத்தகத்தைக் காக்கும் 10 முறைகள்

- அதிகமாகப் பிரிக்கக்கூடாது
- மூலைகளை மடிக்கக்கூடாது
- தலையணையாக வைத்துக் கொள்ளக்கூடாது
- ஆள்மீதோ, பூமி மீதோ அடிக்கக்கூடாது
- குறிப்புகள், கோடுகள் எழுதக்கூடாது
- பிரித்த நிலையில் கவிழ்த்து வைக்கக்கூடாது
- படித்து முடித்தவுடன் எடுத்து வைக்க மறக்கக் கூடாது
- கொடுக்கும் போதும், வைக்கும் போதும் வீசியெறியக் கூடாது
- குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது
- தண்ணீருடனோ, எண்ணெயுடனோ தொடக் கூடாது

## புகழ் என்றால் உந்தன் பெயர் தானே.....

மாமாவின் மகனே! என் அன்பு மச்சானே!
போகாத இடம் போகத் துணிந்தாயே! – வேகாத
தீயினிலே வெந்தாயே! என் தாயின் சோதரனின்
சேயே! நீ நோயாலே ஏன்?

ஏனோ உன் குரல் கேட்டால் நடுக்கம் எனக்குள்ளே
தானே தான் உடலாடும், தளரும் – வீணே தான்
போனதுவே ! எல்லாம் உன் குரலைக் கேளாமல்
ஆனதுவே ! அகத்தில் பயம்!

பயமற்ற உன் பேச்சு! பயப்படுவோர் பலர் கேட்டு
செயலுக்கு நீ தானே நிகர் மச்சான்! – சுயம்விட்டு
அகலாத பேராளா! அயலோர்கள் அறிவார்கள்
புகழ் என்றால் உந்தன் பெயர்!

மச்சாள்
தேவி கனகரத்தினம் குடும்பம்

## சிரிப்பு இரகசியமுறை

இன்பத்தில் சிரிப்பவன் சிறியோன்
துன்பத்தில் சிரிப்பவன் பெரியோன்
பொருளுக்க சிரிப்பவன் மனிதன்
அருளுக்கு சிரிப்பவன் ஞானி
மோகத்தில் சிரிப்பவன் வெறியன்
சோகத்தில் சிரிப்பவன் அறிஞன்
முன் நின்று சிரிப்பவன் காரியக்காரன்
பின் நின்று சிரிப்பவன் கழுத்தறுப்பவன்
தொடர்ந்து சிரிப்பவன் பைத்தியக்காரன்
இடமறிந்து சிரிப்பவன் படித்தவன்

## காலனிடம் தோற்றுவிட்டோம்

என் வயிற்றில் பிறவாத
என் இனிய மூத்தவனாய்
தன் வயதிற்கு மேலான
அறிவாய் அனுபவமாய்
என் குறைகள் தீர்த்தாய்
பொன்னை நிகர்த்த குணம்
பொருள் பொதிந்த வார்த்தை
கண்ணை இழந்தோம் !
மையிருட்டில் மையிருட்டில்
ஆற்றாது போனால்
ஆறுதலுக்கு நீ வருவாய்
தேற்றத்தான் யாருளரோ
தோற்றுப் போனோம் ஐயா !
காலனிடம் தோற்றுவிட்டோம்
எனினும்
நின் ஆன்மா நித்தியப்
பேரானந்தத்தில் திளைக்கட்டும்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

விஸ்வநாதன் குடும்பம்

ஒருவர் உன்னை உயர்த்திப் பேசும் போது விழிப்போடு இரு
ஒருவர் உன்னைத் தாழ்த்தி பேசும் போது ஊமையாய் இரு
புகழ்ந்து பேசும்போது செவிடனாய் இரு
எளிதில் வெற்றி பெறலாம்
விட்டுக் கொடுங்கள்; விருப்பங்கள் நிறைவேறும்
தட்டிக்கொடுங்கள்; தவறுகள் குறையும்
மனம்விட்டுப் பேசுங்கள்; அன்பு பெருகும்.

## மண்ணுக்குள் மலர்ந்திட்ட மலர் !

அண்ணனின் மருமகனே ! நாகேந்திரபிள்ளையே !
அழியாத அறிவின் ஆகாய எல்லையே !
எண்ணிய நூல்களுக்கு இருப்பிடத்தை ஈந்தவனே!
இனியவனே ! இணையில்லா மொழி கூறும் வேந்தனே !

பண்ணரிய செயல் செய்து பணிவாக நின்றவனே !
பெருநோயைத் தான் சுமந்தும் துணிவாகச் சென்றவனே !
கண்ணருகில் நீர் வழியக் காரணமாய் ஆனாயோ !
கனவோடு கனவாக வாழ்ந்தே நீ போனாயோ !

புத்தகங்கள் வெளியிடவோ ? புது நூல்கள் அச்சிடவோ ?
நித்தமொரு நூல் சேர்த்து நூல்நிலையம் ஆக்கவோ ?
எத்தனையோ எண்ணரிய கனவுகள் கனவாகிப் போனதோ ?
மண்ணுக்குள் மலர்ந்திட்ட மலர் !

சித்தப்பா
சுந்தரேசன் குடும்பம்

நீ மகிழ்ச்சியாக இருக்கும் போது,
நீ யாரை விரும்புகிறாயோ அவரை
நினைத்துக் கொள்வாய்!
நீ துயரத்தில் இருக்கும் போது,
உன்னை யார் விரும்புகிறாரோ அவரை
நினைத்துக் கொள்வாய்!

## நட்புக்கு இலக்கணமான என் நண்பா !

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு என்பதற்கு
இலக்கணமாய் வாழ்ந்த நண்பா!
தோற்றுப் போகாத எங்கள்
நாற்பது வருட நட்பு ஓர் ஜென்ம பந்தம்!
இது இறைவனின் ஏற்பாடு!
எந்த சொந்தங்கள் என்றாலும்
நட்பு என்பது தனித்துவமே!
ஞாபகம் வருகிறது! அந்தக் காலங்கள்!
பேசிய வார்த்தைகள் இன்று
எந்தக் காற்றில் கலந்து விட்டனவோ?
நடந்த சாலைகள் இன்று
எந்த ஊர்களை அடைந்து விட்டனவோ?
ஒன்றாய்க் கதைத்து மகிழ்ந்திருந்த காலங்கள்
எந்தக் கனவுகளுள் புதைந்து விட்டனவோ?
சைக்கிள் பயணங்களும்...
சாலை யோரப் பகிடிகளும்...
உயிர்ப்புடன் நீ செய்த உதவிகளும்...
எந்தளவு மகிழ்ச்சியைத் தந்தனவோ
அந்தளவு............
உன் பிரிவு! உலக்கியது நெஞ்சை...
ஒரு நிமிட நேரம் துடிப்பற்றுப் போனது இதயம்!
நோய் என்ற காலனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற
ஆகாய வழி வந்தேன் உன்னோடு...
'ஆ' என்று காயம் விட்டகன்றாயே! நண்பா! விண்ணோடு...
இனி எந்த செல்போனில் உன் குரல் கேட்பது?
இனி எந்த வழிகளில் உன் முகம் பார்ப்பது?
'நட்பு' எனும் சொல் ஒன்றிற்காய்
நண்பனாகவே வாழ்ந்து நண்பனாகவே வளர்ந்து
நண்பனாகவே மறைந்தாயே! நண்பா!
உன் ஆத்மா என்றென்றும்
சாந்தியில் நிலைத்திருக்கட்டும்!

ஆருயிர் நண்பன் சிகாமணி

## உயிர் ... உயிர்மெய் ... !

அற்றுப்போனது நெஞ்சம்
ஆற்றுப்படுத்தியெமை அன்புசெய்த அண்ணா !
இற்றைப்படுத்தி எதையும் இதம் செய்த இனியவனே !
ஈற்றில் இது என்று நாம் உணர்ந்தும்
உற்ற நல்லுளத்தை உறங்கப் பொறுப்போமா !
ஊற்றாகிப் பெருகும் அறிவுரைகள் நாம்
எற்றிச் சென்றாலும்
ஏற்றாற்போல் எடுத்துரைத்த
ஐயனே என் அயலவனே !
ஒற்றுமையாய் வாழ அணி செய்தாய்
ஓராதார் உள்ளத்தும் ஒளி பாய்ச்ச விளைந்தவன் நீ !
ஔடதமாய் துயர் தணித்தவனே !
கற்றதனைக் கசடறக் கற்று
சற்றும் சளைக்காமல் தற்புகழ்ச்சியின்றி
பற்றுறுதியோடு பகிர்ந்துகொண்ட பெரியவனே !
ஞாயிற்று ஒளிக்கீற்றாய் நானிலத்தில் நிறைந்திருப்பாய்
மற்றவரை மதித்து மாட்சி கொண்டவனே !
வற்றாத ஊற்றாய் வாழ்வாய் எம் உளத்தே !

உயிராய் தோன்றி
உயிர்மெய்யாய் திகழ்ந்து
உயிர் நீத்து மெய்யானாய் !
ந்க்ந்த்ர்ம்ப்ள்ள்

சிவசாமி தயாபரன்

## "நாகேந்திரம்" அங்கிள் எனும் நூலகம்

புதுவடிவு நிறை முகமும்
புன்னகையின் ஒளியும்
போய்க் காண்பார் யாவர்க்கும்
தாய் போன்ற பரிவும்
கதிரவனின் பேரொளியைக்
கலங்க வைக்கும் அறிவும்
கடலலைகள் மீறிவரும்
குரல் வளையின் அதிர்வும்
இது சரிதான்! அது பிழைதான்!
என்றுரைத்த மொழியும்
இணங்காத தனிவழியும்
இணையற்ற தெளிவும்
முதுமையுற முடிந்தனவோ!
விதி இதுவோ! எதுவோ!
முக்திநிலை அடைந்தனவே!
வித்தகத்தின் உருவே!

கலை வாணி தன் வீணை
நரம்பறுந்து நின்றாள்!
காகிதப் பூஞ்சோலைகளின்
காவலனை இழந்தாள்!
நிலைமாறிப் புலம்
பெயர்ந்தாள்!
விழியருவி சொரிந்தாள்!
'நாகேந்திரம்'அங்கிள் எனும்
நூலகத்தோ டெரிந்தாள்!
மலை நீரின் வழி அருவி
விழி அருவி ஆக
வழி காட்டும் ஒளிதீபம்
திரியுடனே போக
உலையோடு உடல் வேக
உயிர் மேகம் ஏக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஆக....

அருள்சீலன் ஹரிஷன்

ஒரு செம்பில் நிறையத் தண்ணீர் இருக்கிறது!
தண்ணீர் செம்பை மிரட்டுகிறது ...
நான் உன்னைக் கரைத்துவிடுவேன் என்று
ஆனால் செம்பிற்கில்லை தலைகுனிவு
செம்பு தலைகுனிந்தால் மிரட்டிய தண்ணீரின் கதி! ...

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா ஒளிப்பிளம்பாய்
அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்கோணங்களிலும்
சிறந்து வாழ்ந்த எங்கள் குடும்பத் தலைவன் அமரர்
திரு. கந்தையா நாகேந்திரபிள்ளை அவர்கள் மீளாத்துயில்
நாடி ஏகன் திருவடியை அடைந்த போது

துயருற்றுத் தவித்த வேளையில் உடன்வந்து துயரத்தில்
பங்குகொண்டு உதவியவர்களுக்கும், அவர் சுகவீனமுற்றிருந்த
வேளை நேரில் வந்து சுகம் விசாரித்த அன்பர்களிற்கும்

மலர்வளையங்களை அனுப்பியோருக்கும், பூமாலை
சாற்றியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச்
செய்திகளை அனுப்பியோருக்கும், காலம் கடந்தேனும்
அறிந்து எங்கள் இல்லம் தேடி வந்து அனுதாபம்
கூறியவர்களுக்கும்,


கிரியைகளின் போது முன்னின்று உதவிகள்
நல்கியவர்களுக்கும், ஈமைக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி கிரியைகளிலும்
சபிண்டீகரண நிகழ்விலும் பங்கு கொண்டவர்களுக்கும்,
இன்றுவரை எமக்கு பல்வேறு உதவிகளும் நல்கிவரும்
அனைத்து உறவுகளுக்கும், விகடன் பிறின்டர்ஸ்க்கும்,

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை செய்த அனைத்து உயர்ந்த
உள்ளங்களுக்கும் எமது உணர்வுபூர்வமான நன்றிகள்
என்றென்றும் உரித்தாகுக.

குடும்பத்தினர்

## வம்சா


*நாகநாதர்
*ஐயம்பிள்ளை
*நாகலிங்கம்
*சின்னத்தங்கம்
*வைத்தியலிங்கம்
*வள்ளியம்மை
*இராசையா
*வைத்தியலிங்கம்
*பொன்னம்மா
*இராசம்மா
*கந்தையா
*சௌந்தரநாயகி
*நாகேந்திரபிள்ளை
சண்முகபவானந்தன்
சிறிசுந்தரி, வதனி
வினோத்
வசந்த்
விஜுஷ்
உதயசங்கர்
சிந்துஜா
*சாலினி

## ாவழி

*வேலுப்பிள்ளை + *தங்கம்
↓
*கந்தப்பிள்ளை + *தங்கம்மா ← *தம்பு + *வள்ளி

*ராமலிங்கம் + *சின்னாச்சி
↓
*வேலுப்பிள்ளை + *செல்லம்மா ← *சின்னத்தம்பி + *தங்கமுத்து

*கந்தப்பிள்ளை + *தங்கம்மா → *பூபாலசிங்கம் + லீலாவதி ← *வேலுப்பிள்ளை + *செல்லம்மா

- சூரியகுமாரி
- அசோகன் + கேதீஸ்வரி
  - → வினோஜா, விதுஷன்
- சந்திரகுமாரி + வேலாயுதபிள்ளை
  - → வசிகரன், சிந்துஜா, வித்யாகரன் + பிரீட்மன்
- யசோதரன் + சாந்தி
- சுகந்தன் + தயாநிதி
  - → சுருதிகா, சுகஸ்திகன்
- ரமணன் + செல்வப்பிரியா
  - → மணிகண்டன், ராம்பிரியன்
- குமணன் + வேல்விழி
  - → ஸ்ரீவட்ஷன், ஹரிஷ்வரன், டானியா

ரி அமிலா வாமினி

* அமரர்

# அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கை .....

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!

படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!

அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!

மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!

பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!

முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!

வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!

இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!

“அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்” எனக் கேட்டேன்!

ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
“அனுபவம் என்பதே நான் தான்” என்றான்!

– கண்ணதாசன்

Vihadan Printer
541/2, Galle Road, Colombo 06.
0112504370
vihadanpr@gmail.com